From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 155/2018

Deposition of witness for: PW - 6

| | | | |
|---|---|---|---|
| Name | : விஜயலெட்சுமி | Father/Husband Name | : வெங்கட்ராமன் |
| Age | : | Calling | : |
| Date | : 24.11.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24 day of 11.2025.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

மனுதாரர்தரப்பில் முதல்விசாரணை

நான் தூத்துக்குடி மாவட்டம் காவல் கட்டுப்பாட்டு அறையில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து 31.07.2018 ம் தேதி பணி ஒய்வு பெற்று தற்போது மதுரையில் குடியிருந்து வருகிறேன். கடந்த 23.11.2017 ம் தேதி மேலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது நிலைய குற்ற எண் 61/2016 வழக்கு கோப்பினை பார்வையிட்டு என் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். அன்றையதினமே சாட்சிகள் செந்தாமரை, போஸ், அம்சவள்ளி, குமார், பானுபிரியா, ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்கண்ட சாட்சிகள் சார்பு ஆய்வாளரிடம் கூறியதைபோல் என்னிடம் கூறியதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை, பட்டியல் சாட்சி குமார், பானுப்பிரியாவை விசாரித்து தனி தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றையதினமே வழக்கின் பிரிவுகள் 498(A), இதசவிலிருந்து 498(A), 506(2) இதச வழக்குபிரிவினை மாறுதல் செய்து மாறுதல் அறிக்கையை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். ( **அந்த சட்டமாறுதல் அறிக்கை அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது** ). எதிரிகளை தேடிவந்த நிலையில் எதிரிகள் நீதிமன்ற பிணையில் சென்றதால் கைது

செய்யவில்லை. இத்துடன் எனது புலன்விசாரணை முடித்து எதிரிகள் மீது 498(A), 506(2) இதசன்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

எதிரி ஆஜர்

எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை

இவ்வழக்கின் சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட அனைவரும் இந்த வழக்கின் புகார்தாரரின் உறவினர்கள் என்றால் சரியல்ல, பட்டியல் சாட்சி குமார் மற்றும் பானுப்பிரியா புகார்தாரரின் ஊர்க்காரர்கள், உறவினர்கள் அல்ல. அதேபோல் புகார்தாரரின் பிறந்த ஊரினை சேர்ந்தவர்களைதான் சாட்சியாக விசாரித்துள்ளேன் என்றால் சரிதான். புகார்தாரர் திருமணம் செய்து கொடுக்கப்பட்ட, வாழ்ந்த இடமான கருங்காலக்குடி அருகே உள்ள வஞ்சிபட்டியை சேர்ந்தவர்களை இந்த வழக்கின் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அதேபோல் புகார்தாரர் குடியிருந்த வீட்டின் அருகே உள்ளவர்களை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் திருமணத்தின்போது அணிந்து வந்த நகைகள் மற்றும் சீர்வரிசை பொருட்கள் குறித்து ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதேபோல் எனது விசாரணையிலும், புகாரிலும் திருமணத்தின்போது அணிந்து வந்து நகைகள் மற்றும் சீர்வரிசை பொருட்கள் குறித்து புகார்தாரர் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல, புகார்தாரர் கொடுத்த புகார் மனுவில் தனக்கு 12 பவுன் நகையும், 1ம் எதிரி ரமேஷ்குமாருக்கு 3 பவுன் நகையும், ரூ.2 லட்சம் மதிப்புள்ள சீர்வரிசை பொருட்கள் என்று சொல்லியுள்ளார்.

2) புகார் மனு எனது காவல் நிலையத்தில் நேரடியாக கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரரை 1ம் எதிரியின் சமரசம் பேச்சுவார்த்தைக்காக சமூக நல ஆர்வாலருக்கு அனுப்பிவைத்தேனா என்றால் இல்லை. அதேபோல் திருமண

தேதியிலிருந்து புகார் கொடுக்கப்பட்ட தேதிக்கு இடைப்பட்ட காலத்தில் புகார்தாரர் 1ம் எதிரி தன்னை கொடுமைப்படுத்தியதாக புகார் ஏதும் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. அதேபோல் புகாரிலும், எனது விசாரணையிலும் மற்றும் குற்ற இறுதி அறிக்கையிலும் எதிரி புகார்தாரனை எந்த தேதியில் கொடுமைப்படுத்தினார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல, திருமணம் முடிந்து 6 மாத காலம் கழித்தே புகார்தாரருக்கு கொடுமை நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. 1ம் எதிரி திருமணம் முடிந்து சில மாதம் கழித்து வெளிநாட்டுக்கு சென்றுவிட்டதை எனது விசாரணையில் தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன்.

3) அசா1 தனது போலீஸ் விசாரணையில் நகைகளை அடகு வைத்து 1ம் எதிரியை வெளிநாட்டிற்கு அனுப்பிவைத்தாக சொல்லியுள்ளார், எவ்வளவு நகை, எங்கு அடகு வைத்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அசா1 புகாரிலும், எனது விசாரணையிலும் 1ம் எதிரி குடித்துவிட்டு வருவதாகவும், ஏன் என்று கேட்டால் அவ்வாறுதான் செய்வேன் என்று சொன்னதாகவும் சொல்லப்பட்டுள்ளது, எந்த தேதியில் சம்பவம் நடந்தது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அசா1 எனது விசாரணையில் அவராகவே அவரது இரண்டு குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு பெற்றோர் வீட்டிற்கு சென்றதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

4) அசா1, 1ம் எதிரியுடன் திருமணத்திற்கு தனி குடித்தனமாக வாழ்ந்து வந்தார்கள் என்றால் சரியல்ல, அவர்கள் 1ம் எதிரியின் தாய், தந்தையுடன் சேர்ந்து வாழ்ந்து வந்ததாகத்தான் எனது விசாரணையில் சொல்லியுள்ளார். இவ்வழக்கில் 2 மற்றும் 3ம் எதிரிகள் வேறு ஊரைச்சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். 2 மற்றும் 3 ம் எதிரிகள்

அசா1 யை என்ன கொடுமை செய்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அசா1 ன் புகார் மற்றும் போலீசார் விசாரணையில் எதிரிகள் அசிங்கமாக என்ன வார்த்தை பேசினார்கள் என்றும், தன்னை எந்த தேதியில் கொடுமை செய்தார்கள், எவ்வாறு கொடுமை செய்தார்கள் என்றும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

5) இவ்வழக்கில் அசா1 யை எதிரிகள் ஆயுதங்களை வைத்து கொலை செய்வதாக மிரட்டியுள்ளதாக அசா1 குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் சம்பவ இடத்திற்கு சென்று சம்பவ இடமான எதிரிகளின் வீட்டிற்கு சென்று அங்கிருந்தவர்களை விசாரித்து பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல, சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரித்தேன், இதுபோன்ற வழக்குகளில் பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தேவையில்லை என்பதால் தயார் செய்யவில்லை. அசா1 திருமணம் ஆகி வசித்து வந்து வஞ்சிபட்டியில் நான் விசாரித்த சாட்சிகள் யார் என்றால் பெயர் ஞாபகம் இல்லை.

6) சட்ட மாறுதல் அறிக்கைக்கு பின்னர் நான் சாட்சிகளை மறுவிசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கில் சொன்னது போல் எதிரிகள் அசா1 யை கொடுமைசெய்யவில்லை, 1ம் எதிரி வெளிநாட்டிற்கு சென்ற பின்னர் அசா1, 1ம் எதிரியின் நண்பருடன் தவறான தொடர்பு வைத்திருந்ததால் அதை 1ம் எதிரி நேரடியாக பார்த்து கண்டித்ததனால் அசா1, 1ம் எதிரியின் வீட்டை விட்டு தானாக சென்று பொய்யாக இந்த வழக்கு கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கில் சொன்னதுபோல் எதிரிகள் அசா1 யை கொடுமை செய்யவில்லை, கூடுதல் வரதட்சனை கேட்கவில்லை, அசா1 ற்கு பொருட்களை

வைத்துகொள்ளவில்லை, அசா1ன் அவர்களது பொருட்களை எடுத்து சென்றுவிட்டார்கள், நான் தற்போது அசா1ற்கு ஆதரவாக எதிரிகளுக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அசா1, 1ம் எதிரியின் விவாகரத்து செய்து கொண்ட விவரத்தை எனது புலன்விசாரணையில் தெரிந்துகொண்டேன் என்றால் தெரியாது, அசா1 சொல்லவில்லை.